திருமதி பாப்பா உமாநாத் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதோடு கோ-ஆப்டெக்ஸ் கிட்டங்கியின் திருச்சி மேனேஜர் அவர்களும் இதற்கு கூட்டாளியாக இருந்து அவருடைய உறவினராகிய ஒருவரிடமிருந்து, அதாவது சேலத்திலிருந்துதான் விசைத்தறி வேட்டிகளை வாங்கியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடுகூட சமீபத்தில் திருச்சி கிடங்கில் பரிசோதனை செய்ததில் 10,000-க்கு மேற்பட்ட இதுபோன்ற மாறுபட்ட வேட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது. ஆகவே விசாரணை முழுமையாக நடக்கும் வரையில் இந்த வேட்டிகளை வேறு மாநிலங்களுக்கு அனுப்பாமல் இருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக கைத்தறித் தொழில் என்பது சவலைப்பிள்ளை மாதிரி கீழே விழுந்து கிடக்கிறது. அப்படிப்பட்ட பல கூட்டுறவு சொசைட்டிகள் நலிந்துபோய் இருக்கின்றன. இதுபோன்ற பெருச்சாளிகள் மீது நடவடிக்கை எடுத்து அந்தத் தொழிலைப் பாதுகாக்க கறாராக, உறுதியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். சம்பந்தப்பட்டவர்களைத் தற்காலிக வேலை நீக்கம் செய்வதோடு அவர்கள் மீது கடுமையான நடவடிக்கையும் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

11-00 மணி

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தவறுகள் எங்களுடைய கவனத்திற்கு வந்ததற்குப் பின்னால் சென்னையிலே இருக்கும் அதிகாரிகள் நேரிலே சென்று விசாரித்து அறிக்கை தந்திருக்கிறார்கள். இதுசம்பந்தமாக மேலும் இப்படிப்பட்ட தவறுகள் நிகழா வண்ணம் நடவடிக்கை மேற்கொண்டு உள்ளோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. தகவல் கோரல்— தொடர்ச்சி.

(உ) சென்னை ஆர். கே. நகர்ப்பகுதியில் சுவர் இடிந்து விழுந்ததால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளித்தல்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை ஆர். கே. நகர் பகுதி, 4-வது வட்டத்தில், செரியன்நகர் பகுதியில் ஒரு வீட்டின் சுவர் இடிந்து 3 குழந்தைகள் பலியாகி இருக்கிறார்கள். 6 பேர் காயமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தகவலை அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திருமதி சற்குணம் அவர்கள் என்னிடத்தில் தந்து, அதற்கு அரசின் சார்பிலே உதவி கேட்டிருக்கிறார்கள். அது கவன ஈர்ப்புத் தீர்மானமாக வந்தும்கூட, அதை உடனடியாக இன்று

இங்கு எடுத்துக்கொள்ள முடியாத சூழ்நிலையில், இந்தப் பிரச்சினையின் அவசர முக்கியத்துவம் கருதி, இந்த அறிவிப்பைச் செய்கின்றேன். இந்த வீட்டினுடைய சொந்தக்காரர் ஏற்கெனவே இறந்துவிட்ட காரணத்தினால், பிள்ளையற்ற சொத்து என்ற முறையில், வளர்ப்பு மகன் ஒருவன் இந்த வீட்டைப்பெற்று, பழுது பார்க்காது இருந்துவிட்ட காரணத்தால் அது இடிந்து விழுந்து இத்தகைய விபத்து ஏற்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் மாண்டுவிட்ட 9 வயது நிரம்பிய சங்கீதா, 8 வயது நிரம்பிய அஜீமா, 7 வயது நிரம்பிய சித்திக் ஆகிய இந்த 3 குழந்தைகளின் சாவுக்காக அந்தக் குடும்பத்திற்குத் தலா 5 ஆயிரம் ரூபாய் வீதம் 15 ஆயிரம் ரூபாய் அரசின் சார்பாக வழங்கப்படுகிறது. காய முற்ற கைரூன், வகீலா பானு, நபீசா, ரமேஷ், வசந்தா, கவுரி ஆகியவர்களுக்கு சிகிச்சை செலவுக்காக தலா 500 ரூபாய் வீதம் 3 ஆயிரம் ரூபாய் அரசின் சார்பில் வழங்கப்படுகிறது(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ்.டி. உகம்சந்த் அவர்களும், திரு. ஆர். சிங்காரம் அவர்களும் கவன ஈர்ப்புத் தீர்மானம் தந்திருப்பதாக நம்முடைய கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். ஆகவே, அதுவும் அவைக் குறிப்பில் இடம்பெறுகிறது.

4. அறிக்கை அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 1990-91—விவாதமும் வாக்கெடுப்பும் —தொடர்ச்சி

கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிருவாகமும்—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: —

''மானியக் கோரிக்கை எண்.28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிருவாகமும் — என்ற தலைப்பின்கீழ் ரூ. 224,86,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''